00023

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2020/2021

இறுதிப் பரீட்சை

**EPD4536/ESD2236** – சமூக உளவியல்

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 16.07.2023 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

- பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி - I

1. "சமூக உளவியல்" என்பதால் நீர் கருதுவது யாது?
2. சமூக உளவியலைக் கற்பதன் **ஐந்து** (05) அனுகூலங்களைப் பட்டியற்படுத்துக.
3. "ABC" மாதிரியுருவின் மனப்பாங்குகளை வரைபட உதவியுடன் விளக்குக.
4. "சமூக சுயம்" எனும் பதத்தினை உமது சொந்த மொழிநடையில் விளக்குக.
5. அவதானிப்பானது சமூக நடத்தையுடைய மனிதனை கற்பதற்கான சிறந்த வழியாகும்." மேற்குறிப்பிட்ட அறிக்கையை ஏற்றுக் கொள்கிறீர்களா? விடைக்கான காரணங்களை முன்வைக்குக.
6. சகபாடி பிள்ளைகளிடையே காணப்படும் **நான்கு** (04) வகையான ஆளுமையை எழுதுக.
7. பால்நிலை மற்றும் பால் ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாட்டைச் சுருக்கமாக விபரிக்குக.
8. ஆல்பேர்டினுடைய தப்பெண்ணத்தின் (Prejudice) அனைத்து நிலைகளையும் சரியான வரிசை நிலையில் எழுதுக.

**(5 X 8= 40 புள்ளிகள்)**

## பகுதி - II

9.

**i.** மனித சமூக நடத்தையை ஆய்வு செய்யும் மூன்று (03) முறைகளை எழுதுக.

(03 புள்ளிகள்)

**ii.** சமூக உளவியல் ஆய்வினை மேற்கொள்வதில் பின்பற்ற வேண்டிய **இரண்டு** (02) ஒழுக்கவிதிகளை விபரிக்குக.

(07 புள்ளிகள்)

**iii.** ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்கு மனித சமூக நடத்தை பற்றிய அறிவு எவ்வாறு பயனுடையதாக இருக்கும் என்பதனை விளக்குக.

(10 புள்ளிகள்)

10.

**i.** பால்நிலை சமத்துவமின்மை (Gender inequality) மற்றும் பாகுபாடு (Discrimination) ஆகிய சொற்களை சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

**ii.** பெண் ஒருவரின் **மூன்று** (03) வகிபாகங்களைச் சுருக்கமாக விபரிக்குக.

(06 புள்ளிகள்)

**iii.** இலங்கை கல்விமுறையில் பால்நிலை தொடர்பாக **மூன்று** (03) பிரச்சினைகளை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்க.

(09 புள்ளிகள்)

11.

**i.** சமூகம் சார்பான நடத்தைகள் **ஐந்தினைப்** (05) பட்டியற்படுத்துக.

(05 புள்ளிகள்)

**ii.** சமூகம் சார்பான நடத்தைகளைப் பாதிக்கும் **நான்கு** (04) காரணிகளை விபரிக்குக.

(08 புள்ளிகள்)

**iii.** வகுப்பறையில் சமூகம் சார்பான நடத்தைகளை விருத்தி செய்வதில் ஆரம்ப பாடசாலை ஆசிரியர் கொண்டிருக்க வேண்டிய பண்புகளை விபரிக்குக.

(07 புள்ளிகள்)

12.

**i.** ஆரம்ப பாடசாலை பிள்ளைகளிடையே அவதானிக்க வேண்டிய **இரண்டு** (02) முதல்நிலை மற்றும் **இரண்டு** (02) இரண்டாம் நிலை உறவுகள் பற்றி விபரிக்குக.

(10 புள்ளிகள்)

**ii.** ஆரம்பப் பாடசாலைக் காலத்தில் நட்புறவின் முக்கியத்துவத்தை **ஐந்து** (05) உதாரணங்கள் மூலம் விளக்குக.

(10 புள்ளிகள்)

13. பின்வருவனவற்றுள் ஏதேனும் **இரண்டிற்கு** (02) சிறுகுறிப்பு எழுதுக.

**i.** தேவைக்கோட்பாடு

**ii.** பிள்ளைகளிடத்தில் காணப்படும் ஆக்ரோசமான நடத்தை

**iii.** முன்பள்ளிப் பிள்ளைகளின் சமூக இடைத்தொடர்பு

(20 புள்ளிகள்)

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -